# இலங்கை இராணுவம்

## கேள்வி அறிவித்தல்

### மருத்துவப் பொருட்கள்/ கட்டுத்துணிகள், மருத்துவ வாயுக்கள், எலும்பு முறிவு சத்திர சிகிச்சை உபகரணங்கள்/ சத்திரசிகிச்சை துணையுறுப்புகள்/ பற் சத்திர சிகிச்சை துணையுறுப்புகள்/ பல் மருந்துகள் மற்றும் கட்டுத்துணிகள் மற்றும் ஏனைய மருத்துவ பொருட்களைக் கொள்வனவு செய்தல்

1. 2021ஆம் வருடத்தில் இலங்கை இராணுவத்திற்குத் தேவையான பின்வரும் விடயங்களை நிலையான விலையின் கீழ் கொள்வனவு செய்வதற்காக கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தின் இராணுவ கேள்விச் சபைத் தலைவரினால் கோரப்படுகின்றன.

| விபரங்கள் | கோவை இல. | பெறுமதி (ரூபா மில்லியன்) | விண்ணப்பங்கள் பெறப்படும்/ கேள்விகள் வழங்கப்படும் திகதிகள் (மு.ப. 9.30 - பி.ப. 4.00 வரை சனி – ஞாயிறு மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த) | கேள்வி/ மூடப்படும் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| • மருந்துகள் மற்றும் கட்டுத்துணிகள் (Pharmaceutical & Medical Consumables) | DAMPS/TENDER/2021/001 முதல் 093 வரை | 468.91 | 02.11.2020 முதல் 20.11.2020 | 30/11/2020 - 1100 மணி கோவை இல. 001 முதல் 025 வரை<br>07/12/2020 - 1100 மணி கோவை இல. 026 முதல் 050 வரை<br>14/12/2020 - 1100 மணி கோவை இல. 051 முதல் 075 வரை<br>21/12/2020 - 1100 மணி கோவை இல. 076 முதல் 093 வரை |
| • பல் சத்திரசிகிச்சை துணைப்பாகங்கள் (Items for Dental Surgery Accessories) | DAMPS/DEN/ACCE/2021/01 முதல் 13 வரை | 8.93 | 02.11.2020 முதல் 20.11.2020 | 27/11/2020 - 1100 மணி கோவை இல. 01 முதல் 13 வரை |
| • பற்சிகிச்சை மருந்துகள் மற்றும் கட்டுத்துணிகள் (Pharmaceuticals & Dental Consumables) | DAMPS/DEN/CONS/2021/14 முதல் 76 வரை | 78.74 | 02.11.2020 முதல் 20.11.2020 | 04/12/2020 - 1100 மணி கோவை இல. 14 முதல் 30 வரை<br>11/12/2020 - 1100 மணி கோவை இல. 31 முதல் 45 வரை<br>18/12/2020 - 1100 மணி கோவை இல. 46 முதல் 60 வரை<br>23/12/2020 - 1100 மணி கோவை இல. 61 முதல் 76 வரை |
| • சத்திரசிகிச்சையகப் பொருட்கள் (Items for Operation Theatres)<br>• ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் பரிகாரங்கள் (Laboratory Chemicals & Reagents) | DAMPS/TENDER/2021/094 முதல் 149 வரை | 201.90 | 23.11.2020 முதல் 18.12.2020 | 06/01/2021 - 1100 மணி கோவை இல. 094 முதல் 122 வரை<br>11/01/2021 - 1100 மணி கோவை இல. 123 முதல் 149 வரை |
| • ECG பிரிவுகளுக்குத் தேவையான பொருட்கள் (Items Required for ECG Sections)<br>• இரத்தச் சுத்திகரிப்பு பிரிவுக்குத் தேவையான பொருட்கள் (Requirements for Dialysis Unit)<br>• மோப்ப நாய்கள் மற்றும் குதிரைகளுக்கான மருந்துகள் (Medicines for Tracker Dogs & Horses)<br>• எலும்பு முறிவு சத்திரசிகிச்சை பொருட்கள் (Items for Orthopaedic Surgery) | DAMPS/TENDER/2021/150 முதல் 192 வரை | 64.77 | 21.12.2020 முதல் 08.01.2021 | 15/01/2021 - 1100 மணி கோவை இல. 150 முதல் 164 வரை<br>22/01/2021 - 1100 மணி கோவை இல. 165 முதல் 192 வரை |
| • மருத்துவ புனருத்தாரணப் பொருட்கள் (Items for Medical Rehabilitation)<br>• விளையாட்டுத்துறை மருத்துவ தேவைப்பாடுகள் (Sports Medical Requirements)<br>• உடற்கூறியல் பிரிவுக்குத் தேவையான பொருட்கள் (Items for Physiotherapy Sections)<br>• அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான பொருட்கள் (Items for ICU)<br>• எக்ஸ்ரே படச் சுருள்கள், பரிகாரப் பொருட்கள் மற்றும் இரசாயனங்கள் (X-ray Films, Reagents & Consumables for Radiology)<br>• மத்திய தொற்றுநீக்கி வழங்கல் திணைக்களத்திற்கான பொருட்கள் (Items for Central Sterilization Supply Department) | DAMPS/TENDER/2021/193 முதல் 217 வரை | 82.88 | 21.12.2020 முதல் 08.01.2021 | 29/01/2021 - 1100 மணி கோவை இல. 193 முதல் 217 வரை |
| • மருத்துவ வாயுக்கள் (Medical Gases)<br>• தடுப்பூசிகள் மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (Items for Preventive Medicine) | DAMPS/TENDER/2021/218 முதல் 231 வரை | 94.97 | 21.12.2020 முதல் 08.01.2021 | 03/02/2021 - 1100 மணி கோவை இல. 218 முதல் 231 வரை |

2. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் சகல விலைமனுதாரர்களினாலும் சமர்ப்பிக்கப்படும் NMRA சான்றிதழின் செல்லுபடியாகும் தன்மை 2021-12-31ஆம் திகதியாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அன்றைய தினம் அல்லது அதற்கு முன் காலாவதியாகும் NMRA சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுமாயின், அது NMRA சான்றிதழ் காலாவதியாகியவுடன் புதிய செல்லுபடியாகும் NMRA சான்றிதழைப் பெற்றுக்கொடுப்பதாக உறுதி செய்யும் கடிதமொன்றையும் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. சமர்ப்பிக்கப்படும் உருப்படிகளுக்காக Bioequivalence Studies அறிக்கை இருக்குமானால் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் விலைகளைச் சமர்ப்பிக்கும் சகல விடயங்களுக்காகவும் மாதிரிகளை (Samples) விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையிலேயே ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

4. கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்தில் (0900 மணித்தியாலம் முதல் 1600 மணித்தியாலம் வரை) கடமை நேரங்களில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. மேற்குறிப்பிடப்பட்ட வழங்கல்களுக்கான சேவைகளை கேள்விதாரரினால் வழங்க முடியுமென்பதற்கான செயலாற்றுகை மற்றும் வருமானம் தொடர்பான நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்வதற்கு கடந்த ஆறு மாதங்களினுள் பேணப்பட்டு வந்த வங்கிக் கூற்றுக்களின் புகைப்படப் பிரதி சகிதம் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழ் சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும். வழங்குநர்களுக்கான கேள்விப் படிவங்கள் குறித்த ஆவணங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதன் பின்னர் மட்டுமே விநியோகிக்கப்படும். ஆனால் இந்த நிபந்தனை 2020ஆம் வருடத்தில் அரச பாதுகாப்பு அமைச்சில் இந்த வகைப்படுத்தலின் கீழ் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

6. கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயங்களின் கீழ் தேவையானவை மற்றும் அளவுகள் தொடர்பான முழுமையான விபரங்கள் இலங்கை இராணுவ மருத்துவ பெறுகை சேவைகள் பணிப்பாளர் சபை, இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு எனும் முகவரியில் வைக்கப்பட்டுள்ளன என்பதுடன் வழங்குநர்கள் அது சார்ந்த தாம் வழங்க உத்தேசிக்கும் விடயங்கள் மற்றும் கோவைகளைத் தெரிவு செய்து கொள்ளலாம். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விடயங்களுக்காகவும் 10 மில்லியன் ரூபாவுக்குக் குறைவான கோவையொன்றுக்கு 1,000.00 ரூபாவும் 10 மில்லியன் ரூபா முதல் 50 மில்லியன் ரூபா வரையான கோவைகளுக்கு 3,500.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படைத் தலைமையக நிதிப் பணிப்பாளர் சபைக்குச் செலுத்தி அப்பற்றுச்சீட்டை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படைத் தலைமையக மருத்துவ பெறுகை சேவைகள் பணிப்பாளர் சபைக்கு (சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த) சமர்ப்பிப்பதன் பேரில் இயைபுடைய கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. கேள்விகளை திறத்தலானது இயைபுடைய விடயங்களின் எதிரில் தரப்பட்டுள்ள திகதிகளில் மு.ப. 11.00 இராணுவ தலைமையகத்தின் இராணுவ யுத்தோபகரண மாஸ்டர் ஜெனரல் கிளையின் ஊடாக ஒருகொடவத்த, அவிசாவளை வீதி, 167/30 ஆம் இலக்க, செலிங்கோ கட்டிடம், இராணுவ முகாமில் இடம்பெறும்

மேலதிக விபரங்களுக்கு: மருத்துவ பெறுகைகள் பிரிவு - 0112-553256

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.**